# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

பிரெஞ்சுப் பணியகம்

22.04.2000

## ஓயாத அலைகள் 3

# ஆனையிறவு இயக்கச்சி படைத்தளங்கள் கைப்பற்றப்பட்டன !

## தமிழர் படைகள் பெரும் வெற்றி

சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பெரும் கோட்டையாகத் திகழ்ந்த ஆனையிறவு பெரும் படைத்தளமும் அதன் பிரதான பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்த இயக்கச்சி படைத்தளமும் புலிகளினால் 48 மணி நேரச் சமரின் பின் கைப்பற்றப்பட்டன.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை அழித்தொழித்த புலிகளின் சிறப்புப் படையணிகள் ஏராளமான இராணுவத் தளபாடங்களை கைப்பற்றியுள்ளன.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் நேர்த்தியான வழிநடத்தலில் இயக்கச்சி படைத்தளத்தின் மீதான தாக்குதலை இன்று அதிகாலை புலிகள் தீவிரப்படுத்தினர். இதனை எதிர்கொள்ள முடியாத படைத்தளம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. கடந்த இரு நாட்களாக இப்படைத்தளத்தை புலிகள் கடும் முற்றுகைக்குள் வைத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆனையிறவு பெரும் படைத்தளம் மீது பல முனைகளூடான சூறாவளி நகர்வை புலிகள் நடத்தினர். இத்தாக்குதலில் அகப்பட்டு சிங்களத்தின் 54வது படைப்பிரிவு சிதறுண்டு ஓடியது. ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட, ஒரு பகுதிப் படையினர் உயிரைக்காப்பற்ற கிளாலியூடாக தப்பி ஓடினர்.

பலம் வாய்ந்த ஆனையிறவு படைத்தளத்தின் வீழ்ச்சியானது தமிழீழத்தின் பெரும் போர்க்களச் சாதனையாய் வரலாறு பூராவும் மதிக்கப்படும். யாழ்ப்பாணத்தை மீட்பதற்கான 'ஓயாத அலைகள்' படை நகர்வு தொடர்ந்தும் முன்னேறிய வண்ணம் உள்ளது.

**பிரான்ஸ்வாழ் தமிழ் மக்களே !**

'ஓயாத அலைகள்' தன் பணியை முழுமையாய் வென்றிட, உறுதிகொண்டு உங்கள் பங்களிப்புக்களை வாரி வழங்குங்கள். தேசத்தின் வெற்றியைப் பாதுகாப்பதும் உங்கள் கரங்களில் உள்ளது.

நன்றி

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழீழ விடுதலைப் புலிகள் - பிரெஞ்சுப் பணியகம்